[1987 நவம்பர் 10

அம்பாசமுத்திரம் அரசு விதை பண்ணையை விரிவாக்கல்.

9—(* வினா எண் 12465) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரத்திலுள்ள அரசு விதைப் பண்ணையை விரிவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் அரசு விதைப்பண்ணை இல்லை. வேளாண்மை பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சி நிலையம் இங்கு உள்ளது. இதை விரிவுபடுத்தும் திட்டம் தற்பொழுது இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சி நிலையத்தில் உயர்ரக நெல் வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த விதைப் பண்ணையிலிருந்து நம் விவசாயிகள் நல்ல விதைகளைப் பெற்று அதிக மகசூலைப் பெறுகிற நெல்லைப் பயிரிட்டுள்ளார்கள். எனவே இந்த ஆண்டிலாவது அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, அந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் உள்ள பண்ணை ஆராய்ச்சிப் பண்ணையே தவிர, விதைப் பண்ணை அல்ல. ஆகவே இதை தற்போது விரிவுபடுத்தும் திட்டம் எதுமில்லை.

கரும்பு, நெல் விலை நிர்ணயம் பற்றி மாநில விவசாய உயர்மட்டக் குழு செய்துள்ள பரிந்துரைகள்.

10—(* வினா எண். 14212) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு, நெல் விலை நிர்ணயம் பற்றி மாநில விவசாய உயர்மட்டக் குழு செய்துள்ள பரிந்துரைகள் என்ன?

(ஆ) விவசாயிகள் சங்கங்களிடமிருந்து கரும்பு விலை நிர்ணயம் குறித்து கோரிக்கை வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?